## பாடம்: 3 - கல்வி கண் போன்றது

**வகுப்பு : III**

**பாடம் : தமிழ்**

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. 'துன்பம்' இச்சொல்லின் எதிர்ச்சொல் _____
   அ) இன்பம் ஆ) துயரம் இ) வருத்தம் ஈ) கவலை
2. 'உதவித்தொகை' இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது________
   அ) உதவ+தொகை ஆ) உதவிய+தொகை
   இ) உதவு+தொகை ஈ) உதவி+ தொகை
3. 'யாருக்கு + எல்லாம்' இச்சொல்லை சேர்த்து எழுதக் கிடைப்பது______
   அ) யாருக்குஎலாம் ஆ) யாருக்குல்லாம்
   இ)யாருக்கல்லாம் ஈ) யாருக்கெல்லாம்
4. வாழ்க்கையை நெறிப்படுத்த உதவுவது __________
   அ) பணம் ஆ) பொய் இ) தீமை ஈ) கல்வி
5. 'தண்டோரா' - என்பதன் பொருள் தராத சொல்______
   அ) முரசு அறிவித்தல் ஆ) தெரிவித்தல் இ)கூறுதல் ஈ) எழுதுதல்

**ஆ. அகர முதலியை பார்த்து பொருள் எழுதுக.**

1. ஆவல் - விருப்பம்
2. தபால் - அஞ்சல்
3. தண்டோரா - முரசறைந்து செய்தி தெரிவித்தல்
4. நெறிப்படுத்துதல் - வழிகாட்டுதல்

**இ. கடினச் சொற்கள்**

1. மிதிவண்டி 2. அஞ்சல்காரர் 3. தலைவர்
4. ஊராட்சி மன்றம் 5. உதவித்தொகை 6. சிறுதொழில்.

**ஈ. சரியான சொல்லால் நிரப்புக.**

1. மக்கள் கிராமசபைக் கூட்டத்தில் <u>கலந்து</u> (களந்து / கலந்து) கொள்ள வேண்டும்.
2. கல்வி <u>கண்</u> (கண்/ கன் ) போன்றது.
3. நான் மிதிவண்டி <u>பழுதுபார்க்கும்</u> (பளுதுபார்க்கம் / பழுதுபார்க்கும் ) கடைவைத்திருக்கிறேன்.
4. ஆசிரியர், மாணவனை பள்ளிக்கு தொடர்ந்து அனுப்புமாறு <u>அறிவுரை</u> (அறிவுரை / அரிவுரை) கூறினார்.

**உ. எதனை, எங்கே செய்வோம்? பொருத்துக.**

1. கல்வி கற்கச் செல்வோம் - பள்ளிக்கூடம்

AKSHAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL KOSAVAPATTY KNOWLEDGE IS POWER

2. பாதுகாப்பு தேடிச் செல்வோம் - காவல்நிலை
3. மருத்துவம் பார்க்கச் செல்வோம் - மருத்துவமனை
4. அஞ்சல்தலை வாங்கச் செல்வோம் - அஞ்சல் நிலையம்
5. பயணம் செய்யச் செல்வோம் - பேருந்து நிலையம்

## ஊ. சொல் விளையாட்டு மயில் தோகையில் உள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்குக



1. சுற்றம் 2. ஏற்றம் 3. தோல்வி
4. ஏமாற்றம் 5. முறம் 6. தோற்றம்

## ஏ. உனக்குச் சரியானவற்றை எடுத்துக் கொண்டு உயர்ந்து செல்




## ஏ. வினாக்களுக்கு விடையளி.

**1. 'தண்டோரா' மூலம் என்ன செய்தி அறிவிக்கப்பட்டது?**

கிராமசபைக் கூட்டத்தில் வீட்டிற்கு ஒருவர் கட்டாயம் கலந்துக் கொள்ள வேண்டும் என்று தண்டோரா போட்டு அறிவிக்கப்பட்டிருந்தது.

**2. ஊராட்சி மன்றத் தலைவர் கிராமசபைக் கூட்டத்தில் எதனைக் குறித்துப் பேசினார்?**

சிறுதொழில் தொடங்குவதற்கான அரசின் உதவித்தொகை வழங்கும் திட்டம் குறித்துப் பேசினார்.

**3. பொன் வண்ணனுக்கு உதவித்தொகை ஏன் கிடைக்கவில்லை?**

பண உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும் என அஞ்சல்காரர் கொடுத்த தபாலில் அறிவிக்கப்பட்டிருந்ததை படிக்கத் தெரியாததால் பொன்வண்ணனுக்கு உதவித்தொகை கிடைக்கவில்லை.